இதைப் போன்றே மற்றுமுள்ள அனைத்து அவதாரங்களிலும் எம்பெருமானுக்கு ஏற்றாற்போலவே பிராட்டியும் அவ்வோ வர்ணங்களிலும், தேவ, மனுஷ்ய, த்ரியக் அவதாரங்களிலும் அதற்கேற்ற ஸ்வரூபத்திலே அவதரிப்பாள்.

ஹே மைத்ரேய! இந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் திருவவதாரங்களை யாதொரு மனிதன் மிக்க பக்தி சிரத்தையுடன் பாராயணம் பண்ணுகின்றானோ அல்லது யாதொரு மனிதன் பக்தி சிரத்தையுடன் கேட்கின்றானோ, அவனுடைய இல்லத்தில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி பிராட்டியார் எப்பொழுதும் நீங்காமல் நித்திய வாஸம் செய்வாள்.

எந்த ஒரு க்ருஹத்தில் இந்த ஸ்ரீதேவியின் சரித்திரமானது தினந்தோறும் படிக்கப்படுகின்றதோ, அந்த கிருஹத்தில் கலகத்திற்குக் ஆதாரமான தாரித்ரியம் (வறுமை) நிச்சயம் இருக்காது.

ஹே மைத்ரேய! ஸ்ரீ மஹா லக்ஷ்மி, முன்னர் பிருகு முநிவரின் புத்ரியாக அவதரித்ததையும் அதன் பின்னர் மீண்டும் திருப்பாற்கடலில் அவதரித்ததையும் உனக்குக் விளக்கமாகக் கூறினேன்.

*இதி ஸகல விபூத்யவாப்தி ஹேது: ஸ்துதிரியம் இந்த்ர முகோத் கதா ஹி லக்ஷ்ம்யா:|*
*அநுதினம் இஹ பட்யதே ந்ருபிர்யைர் வஸதி ந தேஷு கதாசித் அப்ய லக்ஷ்மீ:||*

இவ்விதம் தேவேந்திரனால் துதிக்கப்பட்டதும் ஸமஸ்த ஐச்வர்யங்களுக்கும் காரணமான இந்த ஸ்தோத்திரத்தை பக்தி சிரத்தையுடன் தினந்தோறும் பாராயணம் செய்பவர்கள் ஒருக்காலும் அசுபத்தை அடையாமல், ஸர்வாபீஷ்டங்களும் கிடைக்கப் பெற்று சிறப்புடன் வாழ்வார்கள்.

*இதி ஸ்ரீ விஷ்ணு புராணே ப்ரதமே(அ)ம்சே நவமோ(அ)த்யாய:|*

* * * * * * * * *

## முதல் அம்சம் – பத்தாவது அத்தியாயம்

### *ப்ருகு, அக்நி, மரீசி முதலானோர்களின் வம்ச வர்ணனம்*

*ஸ்ரீ மைத்ரேய உவாச –*

*கதிதம் மே த்வயா ஸர்வம் யத் ப்ருஷ்டோ(அ)ஸி மய முநே|*
*ப்ருகு ஸர்காத் ப்ரப்ருத்யேஷ ஸர்கோ மே கத்யதாம் புந:||*

*ஸ்ரீ மைத்ரேயர் கூறலுற்றார் –*

*(ஹே முநிவரே ! அடியேன் தேவரீரிடத்தில் எதையெல்லாம் கேட்டேனோ அவற்றிற்கெல்லாம் விளக்கமாக பதில் கூறினீர்கள். இப்பொழுது பிருகு முனிவரின் வம்சம் முதலான முழுமையான ஸ்ருஷ்டிக்ரமத்தை அடியேனுக்கு விர்ணிப்பீர்களாக.)*

***ஸ்ரீ பராசர முநி கூறுகிறார் –***

ஹே மைத்ரேய! பிருகு முநிவருக்குக் கியாதி என்ற தன் மனைவியினிடத்தில் பகவான் ஸ்ரீமந் நாராயணனின் பத்நீயாகிற ***ஸ்ரீ மஹாலக்ஷ்மியும்***, ***தாதா*** மற்றும் ***விதாதா*** என்ற பெயர்களையுடைய இரண்டு பிள்ளைகளும் பிறந்தனரென்று முன்பே சொன்னேன் அல்லவா? அந்த தாதாவும் விதாதாவும் மஹாத்மா மேருவின் புத்ரிகளான ஆயதி, நியதி என்ற கன்னிகைகளை முறைப்படி விவாஹம் செய்து கொண்டனர்.

தாதாவிற்கு ஆயதியினிடத்தில் ***ப்ராணன்*** என்ற மகனும், விதாதாவிற்கு நியதியினிடத்தில் ***ம்ருகண்டு*** என்ற மகனும் பிறந்தனர். அந்த தாதாவின் குமாரன் ப்ராணனுக்கு ***த்யுதிமான்*** என்ற பிள்ளையும், அந்த த்யுதிமானுக்கு ***ராஜவான்*** என்ற மகனும் பிறந்தனர்.

மேலும், விதாதாவின் குமாரன் ம்ருகண்டுவுக்கு ***மார்க்கண்டேயன்*** என்ற மகனும், அந்த மார்க்கண்டேயனுக்கு ***வேதசிரன்*** என்ற மகனும் பிறந்தனர். அவர்களாலே ப்ருகு வம்சம் இவ்வுலகத்தில் நன்கு பரவியது.

இது இவ்விதம் இருந்தபோது, ***மரீசி*** மாமுநிவருக்கு ***சம்பூதி*** என்ற மனைவியின் மூலம் ***பௌர்ணமாஸன்*** என்ற புத்திரன் ஜநித்தான். அந்த பௌர்ணமாஸனுக்கு ***விரஜன்*** மற்றும் ***பர்வதன்*** என்பதான இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களின் வம்சத்தைப் பற்றி விரிவாகப் பின்னர் கூறுகின்றேன்.

ஆங்கிரஸ் முநிக்கு பத்நியான ஸ்ம்ருதி என்பவள் ***ஸிநிவாலீ, குஹூ, ராகை, அநுமதி*** என்பதான பெயரைக் கொண்ட நான்கு பெண்களைப் பெற்றாள். அத்ரி மாமுநிவருக்கு தர்மபத்நியான அநுஸூயா என்பவள், ***சந்திரன், துர்வாஸர்*** மற்றும் மஹாயோகி ***தத்தாத்ரேயர்*** ஆகிய பாபமற்றவர்களான மூன்று பிள்ளைகளைப் பெற்றாள்.

புலஸ்த்யரின் மனைவி ப்ரீதி, ***தத்தோலிகா*** என்ற பெயருடைய மகவை ஈன்றாள். அவர் பூர்வ ஜன்மமான ஸ்வாயம்புவ மந்வந்தரத்தில் ***அகஸ்த்தியர்*** என்றழைக்கப்பட்டார். பிரஜாபதி ***புலஹர்*** தனது மனைவியான ***க்ஷமை*** என்பவளிடத்தில் ***கர்த்தமர், அர்வரீயான், ஸஹிஷ்ணு*** என்ற மூன்று புத்திரர்கள் தோன்றினர்.

***க்ரது*** மாமுநிவருக்கு ***ஸந்ததி*** என்ற பத்னியிடத்தில் ***ஊர்த்வரேஸர்*** என்பவரும், கட்டை விரல் பரிமாணமுள்ளவர்களும், சூரியனைப்போன்று பிரகாசிக்கின்றவர்களும் ***வாலகில்யர்கள்*** என்று அழைக்கப்படுகின்றவர்களுமான அறுபதினாயிரம் முநிவர்கள் பிறந்தனர்.

***வஸிஷ்டர்***, ***ஊர்ச்ஜை*** என்ற பெண்ணிடத்தில் ***ரஜன், கோத்ரன், ஊர்த்தபாஹு, ஸவன், அநகன், ஸுதபன்*** மற்றும் ***சுக்கிரன்*** ஆகிய எழுவர் பிறந்தனர். இவர்கள் ஸ்வபாவத்திலே நிர்மலமானவர்களாக இருந்ததினால் மூன்றாவது மந்வந்த்ரத்தில் ***ஸப்த (ஏழு) ரிஷிகளாக*** ஆனார்கள்.

யோ(அ)ஸாவக்ந்யபிமாநி ஸ்யாத் ப்ரஹ்மணஸ்தநயோ(அ)க்ரஜ:।
தஸ்மாத் ஸ்வாஹா ஸுதாகும்லேபே த்ரீநுதாரௌஜஸோ த்விஜ॥ (1–10–24)

பாவகம் பவமானம் து ஶுசிம் சாபி ஜலாஶிநம்। (1–10–25)

(பிரஜாபதியின் மூத்த மகனான நெருப்பிற்கு அபிமானி தேவதையான அக்நி என்பவனுக்கு தனது பத்நியான ஸ்வாஹா தேவியினிடத்தில் தேஜஸ்விகளான பாவகன், பவமானன், ஜலத்தை பக்ஷணம் செய்கின்ற ஶுசி என்ற மூன்று பிள்ளைகள் பிறந்தனர்.)

தேஷாம் து ஸந்ததாவந்யே சத்வாரிம்ஶச்ச பஞ்ச ச।
கத்யந்தே வஹ்நயச்சைதே பிதா புத்ர த்ரயம் ச யத்॥ (1–10–26)

ஏவம் ஏகோநபஞ்சாஶத் அக்நய: பரிகீர்த்திதா:॥ (1–10–27)

(பாவகன், பவமானன், ஶுசி என்ற மூன்று பிள்ளைகள் ஒவ்வொருவரும் முறையே பதினைந்து புத்திரர்களைப் பெற்றுக் கொண்டனர். இவர்கள் நாற்பத்தைவரும் தம் தந்தையரான பாவகன், பவமானன், ஶுசி ஆகிய மூவருடனும், கூடஸ்தரான அக்நி அபிமான தேவதையுடன் சேர்ந்து நாற்பத்தொன்பது அக்நிகள் என்று உலகத்தோரால் அழைக்கப்படுகின்றனர்.)

பிதரோ ப்ரஹ்மணா ஈஸ்ருஷ்டா வ்யாக்யாதா யே மயா த்விஜ।
அஹ்நிஷ்வாத்தா பர்ஹிஷதோ அநக்நய: ஸாக்க்நயஶ்ச யே॥ (1–10–18)

ஹே மைத்ரேய! நான்முக பிரமன் ஸ்ருஷ்டி செய்த அக்நிஷ்வாத்தர் என்றும் பர்ஹீஷதர் என்றும் சொல்லப்பட்டவர்கள் யாகங்களைச் செய்தவர்களும், செய்பவர்களுமான பிதுர்கணமாவர்கள்.

இந்த பிதுர் கணங்களை மணந்த ஸ்வதை என்ற பெண்மணியானவள் மைனை, வைதரணி என்னும் பெயர்களைக் கொண்ட இரு பெண்களைப் பெற்றாள். அந்த இருவரும் உத்தம ஜ்ஞாந ஸம்பந்நர்களாகவும், எல்லா குணங்களிலும் சிறந்த பிரமவாதிகளாகத் திகழ்ந்தனர்.

இத்யேஷா தக்ஷ கன்யாநாம் கதிதாபத்ய ஸந்ததி:।
ச்ரத்தாவாந் ஸம்ஸ்மரன்னேதாமன்பத்யோ ந ஜாயதே॥ (1–10–21)

(ஹே மைத்ரேய! இவ்வாறு அபிவிருத்தியடைந்த தக்ஷ ப்ரஜாபதியின் சந்தான க்ரமத்தை உனக்குக் கூறினேன். இதை மிக்க நம்பிக்கையுடன் ஸ்மரணம் செய்த மனிதன் ஒருக்காலும் ஸந்தான பாக்கியம் இல்லாதவனாக இருக்க மாட்டான்.)

இதி ஸ்ரீ விஷ்ணு புராணே ப்ரதமே(அ)ம்ஶே தஶமோ(அ)த்யாய:।

* * * * * * * * * *